# பெப்ரவரி - 09 - வியாழன்

## ஆண்டவரின் திருமுழம்
## “ஆண்டவர் சீயோனிலிருந்து ஆசீர் வழங்குவாராக” (தி.பா.5)

---

### முதல் வாசகம்: தொடக்க நூல் 2:18 – 25

பின்பு ஆண்டவராகிய கடவுள், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று. கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான் தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை. ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார். ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார். அப்பொழுது மனிதன், ”இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்” என்றான். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர். மனிதன், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கப்படவில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்

### நற்செய்தி: மாற்கு 7: 24 – 30

அக்காலத்தில், இயேசு எழுந்து அங்கிருந்து புறப்பட்டுத் தீர் பகுதிக்குள் சென்றார். அங்கே அவர் ஒரு வீட்டிற்குள் போனார் தாம் அங்கிருப்பது எவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பியும் அதை மறைக்க இயலவில்லை.உடனே பெண் ஒருவர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளே வந்து, அவர் காலில் விழுந்தார். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருந்தது.அவர் ஒரு கிரேக்கப்பெண் சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு அவரை வேண்டினார்.இயேசு அவரைப் பார்த்து, ”முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார்.அதற்கு அப்பெண், ”ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே” என்று பதிலளித்தார்.அப்பொழுது இயேசு அவரிடம், ”நீர் இப்படிச் சொன்னதால் போகலாம் பேய் உம்மகளை விட்டு நீங்கிற்று” என்றார்.அப்பெண் தம் வீடு திரும்பியதும் தம் பிள்ளை கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் ஓடிவிட்டதையும் கண்டார்.

**தியானம்:** நம்பிக்கை தான் ஒரு மனிதவாழ்விற்கு ஆணித்தரமான தொன்றாக அமைகின்றது. ஏனென்றால் ஒரு நபரிலோ, அல்லது நாங்கள் செய்யும் செயல்களிலோ நம்பிக்கையுடன் செயற்படும் பொழுது யாவும் வெற்றிகரமாகவே நடந்தேறும். இயேசு பல அற்புதங்களை, அதிசயங்களை செய்து ஆறுதல் அற்றவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவர்கள் கண்ணீரைத் துடைக்கின்றார். இவை யாவும் அறிந்த உண்மையே. அன்று கனானய பெண்ணும் கூட இயேசு ஒருவரால் தான் தனதுமகளின் நோயிலிருந்து விடுதலை கொடுக்க முடியும் என்று நம்பினாள், விசுவசித்தாள் எனவேதான் இயேசுவிடம் வந்து அவர்பாதங்களில் விழுந்து தனது மகளைக் குணப்படுத்தும் படியாக கதறுகின்றாள். அவளது நம்பிக்கையின் நிமித்தம் அவளது மகளுக்கு பிடித்திருந்த தீய ஆவியும் அவளை விட்டு நீங்கியது. இங்கு ஒன்றைப் பார்ப்போமேயானால் அவள் வேற்றுனத்துப் பெண்ணாக இருந்தாலும் இன, மத, மொழி வேற்றினத்து வேறுபாடின்றி அவர் யார் யாரெல்லாம் நம்பிக்கையுடன் வருகின்றார்களோ அவர்கள் யாவருக்கும் விடுதலை நிற்சயமாகிவிகின்றது. இவ்வாறு நம்பிக்கையுடன் வாழ்வோர் அனைவரும் அவருக்கு அஞ்சி, நடுங்கி பணிந்துவாழ்வார்கள். இவ்வாறாக வாழ்வோர் யாவரும் பேறுபெற்றவர்கள். அவர்கள் ஆசீர்வாதத்தினால் நிரம்பப் பெற்று குடும்பவாழ்வில் மகிழ்வும் சந்தோஸமும் என்றும் மலர்ந்து காணப்படும். எனவே கனாணயப் பெண்ணின் நம்பிக்கையின் நிமித்தம் அவளது மகளின் நோய் நீங்கியதோ அதே போன்று எமது வாழ்க்கையிலும் பலவிதமான மனநோய்கள், உடல் நோய்களால் சொல்ல முடியாமல் தவிக்கலாம் எதுவாக இருப்பினும் விடுதலை தருபவர் இயேசு ஒருவரே என்று விசுவசித்து அவரிடம் யாவற்றையும் ஒப்புக் கொடுத்தவர்களாக, எமது குடும்பத்திலும் அன்பும், அமைதியும் என்றும் நிலவ அவர் காட்டிய வழியில் நடப்போம்.